ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2142/74 - 2019 සැප්තැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.09.26

*2142/74 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டம்***

*9 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

கௌரவ பிரதமர் மற்றும் தேசியக் கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரினால், “பிராந்திய வர்த்தக விமானப் பயணங்களை செயற்படுத்துவதற்காக பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல்” என்ற வாசகத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 19/1799/105/009-II ஆம் இலக்கம் கொண்ட மற்றும் 2019, யூன் மாதம் 24 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தை பரிசீலிக்கப்பட்டதன் பின்னர், 2019, ஓகத்து மாதம் 06 ஆந் திகதி அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு இயைவாக, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஆகிய நான், 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் மூலம் பிறப்பிக்கப்படுகின்ற இந்தக் கட்டளையின் பிரகாரம், இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தினை இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருப்பதை இத்துடன் அறியத்தருகின்றேன்.

**அட்டவணை**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை, அக்குறித்த ஓடுபாதையின் நீள்வரிக் கூறு மற்றும் அக்குறித்த ஓடுபாதைக்கு அடுத்துள்ள அதற்கு வட பக்கமாக அமைந்துள்ள விமான நிலையத்துக்குரிய முழு நிலப்பகுதியாகும்.

அர்ஜுன ரணதுங்க, (பா. உ.)
போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு,
“செத்சிறிபாய” கட்டம் II,
பத்தரமுல்ல,
2019, செத்தெம்பர் 26.

*10-412*

1A - G 31123 — 20 (2019/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*